Literacy for a Billion

Movie: Roja Malare
Year: 1997

Song: Aanandham Vandhathadi
Lyricist: T M Jayamurugan

ஆனந்தம் வந்ததடி
ஆனந்தி உன்னாலே
ஞானங்கள் வந்ததடி
ஆனந்தி உன்மேலே
என் காதல் கண்மணி
உன் கானம் கேட்கயே
உயிருக்கு உயிராய்
உந்தன் நெஞ்சில்
நான் சேர்வதெப்போ
அழகின் உருவே இதய மலரே
உதயமாகும் புதிய நிலவே
ஆனந்தம் வந்ததடி
ஆனந்தி உன்னாலே
ஞானங்கள் வந்ததடி
ஆனந்தி உன்மேலே
மேகம் கருக்கையிலே
தோகை விரிக்கும் மயிலே
ஆ....
மேகம் கருக்கையிலே
தோகை விரிக்கும் மயிலே
கண்ணே என் கண்ணில் வந்து
காதல் கதை சொல்வதெப்போ
மாலை இளம் பொழுதில்
கானம் படிக்கும் குயிலே
தாலாட்டும் தென்றலாய் நீ
பாட்டு சொல் கேட்பதெப்போ
உனது மடியில் விழிகள் மூட
உறங்க வைத்து நீயும் பாட
ஆனந்தம் வந்ததடி
ஆனந்தி உன்னாலே

ஞானங்கள் வந்ததடி
ஆனந்தி உன்மேலே
மாதர்கள் மலரெடுத்து
மலருக்கு மலர் தொடுத்து
மாதர்கள் மலரெடுத்து
மலருக்கு மலர் தொடுத்து
மருதாணி வண்ணமிட்டு
பெண்ணழைத்து முன்னே வர
பூமாலை நானெடுத்து
தோளோடு சூடிவிட்டு
மார்போடு சேர்த்துக்கொள்ளும்
மணநாளின் தேதி சொல்லு
நாதம் முழங்க நேசம் துலங்க
வாழ்த்து குவிய வாழ்வு துவங்க
ஆனந்தம் வந்ததடி
ஆனந்தி உன்னாலே
ஞானங்கள் வந்ததடி
ஆனந்தி உன்மேலே
என் காதல் கண்மணி
உன் கானம் கேட்கயே
உயிருக்கு உயிராய்
உந்தன் நெஞ்சில்
நான் சேர்வதெப்போ
அழகின் உருவே இதய மலரே
உதயமாகும் புதிய நிலவே
ஆனந்தம் வந்ததடி
ஆனந்தி உன்னாலே
ஞானங்கள் வந்ததடி
ஆனந்தி உன்மேலே

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.